20-01-2025.

S.C.No.11/2021

Crl.M.P.No.4465/2023 மனுவானது 11.12.2023 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.1 கற்பகம் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை

சம்பவத்தில் இறந்த கிருஷ்ணமூர்த்தி எனது கணவர். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எதிரியின் சங்கலியின் வீட்டருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அழகர்சாமி எனது கணவரது அண்ணன். 17.05.2020ம் தேதியன்று அழகர்சாமி இருசக்கர வாகனத்தில் வந்து சண்டை போட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த சண்டை 2.30 மணிக்கு நடந்தது. அந்த விவரத்தை எனது மச்சான்அழகர்சாமி சொன்னார். என் வீட்டுக்கும். எதிரியின் வீட்டுக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. ஒரே தெரு இல்லை. வேறு வேறு தெரு ஆகும். அழகர்சாமி சண்டை போடுவதற்கு முன்பு எங்களுக்கும் எதிரிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. என் கணவருக்கும் எதிரிக்கும் இதற்கு முன்பு எந்த பிரச்சனையும் இல்லை. நான், என் கணவர், அழகர்சாமி ஆகிய மூவரும் முதலில் எதிரி வீட்டுக்குச் சென்றோம். அதன் பின்பு என் கொழுந்தன் அழகேசன் வந்தார். நாங்கள் போனபோது எதிரி வீட்டில் எதிரியின் மனைவி இருந்தார். பக்கத்து வீட்டில் ஆட்கள் இருந்தார்கள். 8, 10 பேர்கள் இருந்தார்கள். சண்டை நடந்த வீட்டுக்கு முன்பு கழிவுநீர் சாக்கடை உள்ளது என்றால் இல்லை. அங்கிருந்த சாக்கடையை வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் இல்லை. எதிரி வீட்டிற்கு பகல் 2.45 மணியளவில் சென்றோம். நாங்கள் நான்கு பேரும் சென்று எதிரியின் வீட்டில் இருந்த அவரது மனைவியிடம் சத்தம் போட்டோம் என்றால் இல்லை. என் கணவர் எதிரியை பார்த்து ஏன் என் அம்மாவை பார்த்து தரக்குறைவாக பேசுகிறாய் என்று கேட்டார். என் மச்சான் அழகர்சாமி கேட்கவில்லை என்றால் சரியல்ல. அவர் அதற்கு முன்பே போய் கேட்டுக்கொண்டிருந்தார். அதற்கு பின்னர் என் கணவர் சென்று கேட்டார். என் மச்சான் கேட்டுக்கொண்டிருந்தார் என்றும் அதற்கு பின்னர் என் கணவர்

சென்று கேட்டார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி கத்தியை எடுத்து குத்தும்போது நாங்கள் யாரும் தடுக்கவில்லையா என்றால் பேசிக்கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தபோது திடீரென கத்தியால் குத்திவிட்டார். என் கணவரை தவிர வேறு யாருக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. முதல் விசாரணையில் எதிரி என் கணவரை முதல் குத்து கத்தியால் குத்தியும் என் கணவர் சாகவில்லை எனச் சொல்லி மீண்டும் ஒரு குத்து குத்தியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் முதலில் ஒரு குத்து கத்தியால் என் கணவரை குத்தியிருந்தால் கண்டிப்பாக நாங்கள் சென்று தடுத்து இருப்போம் என்றும் மீண்டும் 2வது குத்து எதிரி குத்துவதற்கு வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி என் கணவரை குத்திய கத்தியை நான் நேரில் பார்த்தேன். அந்த கத்தியில் இரும்பு பிடியில் இரத்தம் இருந்ததா, கத்தி முழுவதும் இரத்தம் இருந்ததா என்றால் கத்தியால் குத்திவிட்டு கத்தியை கொண்டு ஓடிவிட்டதால் இரத்தம் இருந்தது எனக்கு தெரியாது. என்னவிதமான கத்தி என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை. சம்பவம் நடந்தவுடன் இருசக்கர வாகனத்தில் காயம்பட்ட என் கணவரை அலெக்சும் வினோத்தும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சம்பவம் நடந்து கொண்டிருக்கும்போது வினோத் அந்த பக்கமாக வந்துகொண்டிருந்தார். வினோத் எனக்கு என்ன உறவு வேண்டும் என்றால் உறவு கிடையாது. ஊர்க்காரர். என் கணவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனவுடன் நாங்களும் பின்னால் சென்றுவிட்டோம். சுமார் 3 மணிக்கு போயிருப்போம். மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் முக்கால் மணி நேரம் இருந்தோம். மருத்துவர் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னாரா என்றால் எனக்கு தெரியாது. புகாரை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில் இருந்த ஒரு பையன் நான் பதட்டத்தில் இருந்ததால் அவர் எழுதிக்கொடுத்தார். அந்த புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த பையன் எழுதிக்கொடுத்ததை படித்துப் பார்த்துதான் கையெழுத்து போட்டேன். புகாரை

எழுத நான்தான் விவரம் சொன்னேன். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரில் என் மாமனார் சாட்சி கையெழுத்து போட்டார். புகாரை 17.05.2020ம் தேதி காவல் நிலையத்தில் கொடுத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். விசாரித்தவர் சார்பு ஆய்வாளரா, ஆய்வாளரா என்பது எனக்கு தெரியாது. சம்பவம் எதுவுமே நடக்கவில்லை என்றும், நாங்கள்தான் எதிரியின் வீட்டுக்கு சென்று சத்தம் போட்டோம் என்றும் அங்கு நடந்த தள்ளுமுள்ளில் அங்கு கழிவு நீர் கால்வாய்க்காக போட்டிருந்த சென்டிரிங் கம்பியில் என் கணவர் விழுந்து அவருக்கு ஏற்பட்ட காயத்தினால்தான் அவர் இறந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியின் மனைவியிடம் சண்டை போட்டதால் எதிரி எங்கள் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று எண்ணி எதிரி மீது தவறாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.20 16:56:24 +0530

Principal District Judge,
Dindigul.